# ஆடுகளும் ஓநாய்களும்



எல்.ஆர்.தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உளர் – இலர்
இவர்களுக்கிடையிலான போராட்டமே
உலக வரலாறாயிருக்கிறது.

நான் தேடுகிறேன்
எழுதப்படாதவர்களின்
எழுதப்படாதவைகளின்
வரலாற்றை.

– இங்கிருந்தே...

எங்களுக்கான அனைத்தும்
பரிந்துரைகளின் மீதே
கட்டியெழுப்பப்படுகின்றனவாய்...
ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும்
உள்ளாக்கப்பட்டு
அங்கலாய்த்துத் திரியும்
அற்பக் கூட்டங்களாயின பின்
விற்பனையாகின்றன
தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள்!

– தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.KUGAN
78, 2nd LANE
ANANDA PURI
TRINCO

# ஆடுகளும் ஓநாய்களும்

**கவிதைத் தொகுப்பு**

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் :- ஆடுகளும் ஓநாய்களும்
வகை :- கவிதை
ஆசிரியர் :- எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
முதற் பதிப்பு :- 2023 - ஆடி
உரிமை :- ஆசிரியருக்கு
பக்கம் :- 90
வெளியீடு :- நீங்களும் எழுதலாம்
முகவரி :- 43/4, சனல் ஒழுங்கை, திருகோணமலை.
தொலைபேசி :- 0778812912
வடிவமைப்பும் அச்சும் } மதுரன் கிறா(f)பிக்ஸ் அல்வாய்.
விலை :- 800/=

Title :- Adukalum Onaikalum
Cetegory :- Poem
Author :- S.R.Thanabalasingam
First Edition :- 2023. July
Publication :- Neenkalum Eluthalam
Copyright :- Author
Page :- 90
Address :- 43/4, Channel Lane, Trincomale.
Phone :- 0778812912
Design & Print :- Mathuran Graphics, Alvai
0776688318, 021 226 3099.
e-mail: mathurangraphics@gmail.com
I.S.B.N :- 978-955-53138-2-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில்
சகலவிதமான அடக்குமுறைகளுக்கும்
ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடி
உயிர்நீத்த அனைவருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம் கவிதைகள்**

திருகோணமலையிலிருந்து இலக்கிய ஏடுகள் பல வெளிவந்தபோதும், அவற்றின் நிலைப்பு பற்றிய தகவல்கள் மகிழ்வானவையல்ல. தமிழ்ச் சிற்றேடுகள் யாவிலும் பெருவாரியானவை தனிப்பட்டோர் முயற்சிகள் என்பதால், நிறுவன ஆதரவின்மையும், நிதி, விநியோகம் உட்பட சவால்கள் அவற்றின் இடையறா வெளியீட்டை மறிப்பன. கூட்டு முயற்சிகளும் சில ஆண்டுகளுக்குள் முடங்கியுள்ளன. இப் பின்புலத்திற் கவிதைக்கான சிற்றேடுகள் ஏறத்தாழ யாவும் மறைந்ததில் வியப்பில்லை.

இலங்கையில் 1955இல் வெளியான "தேன்மொழி" தொட்டு, ஓரிரு விலக்குகள் நீங்கலாக, எக் கவிதை ஏடும் ஆறு இதழ்கட்கு மேற் தாங்கவில்லை. கவிதைக்கான இதழாக 19 இதழ்கள் வரை வெளிவந்த "யாத்ரா" பின்னர் இலக்கிய இதழாகி சிலகாலத்தில் ஓய்ந்தது. ஈழத்துக் கவிதை ஏட்டியலில் யாத்ராவின் சாதனை நீடிப்பிலும் இலக்கியத் தரத்திலும் மெச்சத் தக்கது. எனினும் "நீங்களும் எழுதலாம்" இதுவரை 32 இதழ்களைக் கண்டு, பிறர் எட்டக் கடினமான ஒரு இலக்கை உண்டாக்கி இன்னமுந் தொடர்கின்றது.

கவிதைகளை நம் முன் நிறுத்துவதினும் முக்கியமாகத், தொடக்கத்தினின்றே, புதிது புதிதாகக் கவிஞர்களை நம் முன் நிறுத்தியுள்ளமை அதன் சிறப்பு.

கவிதை பற்றிய அக்கறை மங்கிக் கவிதை வாசிப்பு அருகிவரும் நம் சூழலிற், கவிதைகட்கும் உயிரூட்டும் காரியத்தைத் தனபாலசிங்கம் 2007ம் ஆண்டு தொட்டுத் தளராது செய்கிறார். அவருக்கு இலக்கிய நண்பர்கள் உள்ளனர். ஆயினும் நூல் வெளியீட்டுப் பணியில், அவர் முற்றிலுந் தன்னையே நம்பி இயங்குகிறார் என்பது என் மதிப்பீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையோ தன் ஏட்டையோ விளம்பரப் படுத்தாது, கவிதை ஏடு நடத்தும் தனபாலசிங்கத்தின் பணி சுயநலமற்றது என்பது போதாது. ஏனெனில் அதன் மூலம் அவர் தன்னைப் பலவாறுந் துன்புறுத்துகிறார். பணமும் பணஞ் சம்பாதிக்க நேரமும் இல்லாத ஒரு மனிதக் கூட்டத்திற், தன் பணத்தையும் நேரத்தையும் தனக்கு இலாபமற்ற ஒரு காரியத்திற் செலவிடும் ஒருவருக்குப் புத்திப் பிசகெனு எவருங் கருத இடமுண்டு. ஆனால், ஒவ்வொரு சமூகத்துறையிலும் இத்தகைய புத்திப் பிசகானோர் சிலரேன் இருப்ப தாலேயே மற்றோரின் வாழ்க்கை அர்த்தமிழவாமற் தொடர இயலுகிறது.

திருகோணமலையில் இலக்கிய அக்கறையை உயிரோடு பேண உழைத்தோர் அநேகரல்ல. தேர்தலுக்கு வெளியே சமூக அரசியற் செயற்பாடுகள் நலியும் ஒரு தமிழ்ச் சூழலிற், பாடநூல்கட்கு வெளியே இலக்கியத்துக்கு ஒதுக்க எத்தனை பேருக்கு நேரமுண்டு? இலக்கிய ஆர்வலர்களிடையே ஒரு நல்லுறவுப் பாலமாகத் தனபாலசிங்கத்தை வைத்திருப்பதும், அவரைப் பத்திரிகைப் பணியிற் தளராது இயக்குவதும் அவருள் இருக்கும் சமூக அக்கறையும் மனிதநேயமுமே எனத் துணிந்து கூறுவேன்.

அவர் கலை இலக்கியங்களைச் சமூகத்தினின்று பிரித்துப் பாரார் என, அவருடைய ஒவ்வொரு கவிதையும் உணர்த்தும். அவரின் தமிழ் மொழிப் பற்று வலிதாயினும் அது மூர்க்கமான மொழி வெறியாகவோ, இனப் பகையாகவோ புலனாவதில்லை. அவரிடம் சமூக மாற்றம் விழையும் உணர்வு மிகுதியெனினும், அவர் தன் உலக நோக்கைத் தனது ஏட்டில் எழுதுவோர் மீது திணிப்பதில்லை. அவரைப் பொறுத்தவரை "நீங்களும் எழுதலாம்" இயங்குதளம். அவர் அதன் பராமரிப்பாளர்.

கவிதை செயற்பாட்டு உலகில் அவர் 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகட்குக் குறையாது இயங்கியுள்ளாரென எண்ணுகிறேன். எனினுந் தன் கவிதைகளை நூலாக்கும் எண்ணம், அவருக்கு அண்மை வரை எழவில்லை. இப்போது எழுந்தமைக்கு நண்பர்களின் அழுத்தங்கள் முக்கிய காரணமாகலாமென ஊகிக்கிறேன்.

தமிழ்த் தேசியத் தலைமைகள் தமிழரைப் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" எனும் நிலைக்குக் கீழிறக்கி, அயல் நாட்டாரிடம் மண்ணையும் மக்களையும் அடகு வைக்கத் துடிக்கும் அவலத்திடையே, தமிழ்த்தேசியத்துக்கு ஒரு புது மனமும் முகமும் தேவை. அது தமிழ் மக்கள் நடுவிலிருந்தே உருவாக இயலும்.

அதைச் செய்ய வல்லோர், பழமையையும் பண்பாட்டையும் மெச்சும் அதே வேளை, பழமை வாதத்தில் உறைந்து போலிப் பெருமைகளுட் சிறைப்படலாகாது. அவர்கட்கு விமர்சனநோக்கும் சுயவிமர்சனமும் தேவை. சமத்துவ நோக்கும் சாதி-இன-மத வெறுப்பின்மையும் அவர்களைத் தக்கோராய் அடையாளங் காட்டும்.

தனபாலசிங்கம் அத்தகையோருள் ஒருவர் என, அவருடைய கவிதைகளை வைத்து உறுதி கூறுகிறேன். அவருடைய அண்மைய கவிதையொன்றின் பகுதியை அதற்குச் சான்றாகக் கூறல் போதும்.

ஒரு தருணம்

விலகி ஓடாதீர் நண்பர்காள்
விடியும் பொழுது நமதாக
முடிவைக் காணும் வழியொன்று
முன்னே தெரியுது பொறியாக
***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணே அலட்சியம் கொள்ளாதீர்
வெறுப்பை கொட்டி உமிழாதீர்
ஏனோ அங்கவர் கொதித்தெழுந்தார்
என்றெண்ணில் அதுவே முறையாகும்
***

காலம் தானாய்க் கனிவதில்லை
கதவுகள் தாமே திறப்பதில்லை
சொல்லி எதுவும் வருவதில்லை
எனும் இயங்கியல் ஏனோ புரிவதில்லை
***

நன்றே நினைந்து செயற்பட்டால்
வென்றே விடலாம் விடிவு தனை.

இக் கவிதை வழமைக்கு மாறாக மரபுச் சந்தத்தில் உள்ளமையும் இவண் கூறத்தக்கது.

ஈழத் தமிழ்க் கவிதையுலகு மேலும் அறிய வேண்டிய ஒரு முக்கிய கவிஞரும் முற்போக்குச் சிந்தனையாளருமான தனபாலசிங்கத்தை அவருடைய பணிகட்காகப் பாராட்டி நன்றி கூறுவதுடன், இந் நூல் பலரையுஞ் சென்றடைந்து பயன்தர அவரை வாழ்த்துகிறேன்.

**முனைவர் சி. சிவசேகரம்**
கொழும்பு - 3
17.11.2022.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்புரை**

## நீங்களுமா ?

என்னது. தனபாலசிங்கம் கவிதைத் தொகுதி வெளியிடு கின்றாரா..?

ஆச்சரியம்தான் வந்தது..

அடுத்தவரின் துக்கத்தையும், நூல்களையும் தூக்கி திரியும் அவர் ஒரு நூலை வெளியிட முயன்று இருக்கின்றார்.

காலம் கடந்த ஒரு மிதிவண்டி. அதில் ஒரு தூக்குப்பை. தூக்குப் பைக்குள் புத்தகங்கள்.. இதுதானே அவர்..

கண்டால் கேட்பது புத்தகங்கள் ஒன்றும் இல்லையா?

நீங்களும் எழுதலாம் வித்தியாசமான அளவு ஒரு கடித உறையில் வைத்து அனுப்பக்கூடிய சுலபம்..

முத்துக்குமாரசாமி கோவில் சந்தியில் நீங்களும் எழுதலாம் வெளிவந்துவிட்டது. என்று ஒரு அறிவித்தலை தொங்கவிட்டு விடுவார்.

எத்தனையோ கவிஞர்கள், எத்தனையோ கவிதைகளை அவர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

புத்தகத்தை எழுதி அச்சிட்டு எப்படி வெளியிடுவது என்று சிந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்கு அவர் தான் வழிகாட்டி... விழாவுக்குள் இன்னொரு விழாவை வைத்து அடக்கி வைக்கும் விழா வித்தகன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கு, பாராட்டு விழா, இறந்தோருக்கு அஞ்சலி இன்னும் பல நடப்பு விவகாரங்கள் என ஆள் கூட்டும் வித்தைகளை அழகாக செய்வார்.

அரபு வசந்தம், நாகூர் ஹனிபாவின் இசை. என வித்தியாசமான தலைப்புகளில் கலந்துரையாடல்கள் அலுப்பின்றி நடத்த ஒரு சிறந்த ஒருங்கிணைப்பாளர்.

மார்க்சிய சிந்தனையாளர். அதனை கடைப்பிடிப்பவரும் கூட...

அடுத்தவருக்காக வாழ்பவர்கள் மிகவும் குறைந்த ஒரு காலம். இவர் அடுத்தவர்கள் துன்பங்களை சுமக்கும் ஒரு சுமை தாங்கி..

நீங்களும் எழுதலாம் இருக்கும் வரை எழுத்து இருக்கும். அதுவரை நீங்களும் இருப்பீர்கள்.

நண்பர் தனபாலசிங்கம் பற்றி சொல்லிவிட்டு, அவரது கவிதையை பற்றி சொல்லாமல் இருப்பது நல்லதல்லவே. இவரின் கவிதைகள் இலகுவானவை. சொற் சிக்கல்கள் அற்றவை.

**ஒட்டுமரம்** என்னும் கவிதையிலிருந்து

**"பிஞ்சுகள் நெஞ்சில் எப்படி**
**புகுந்தன நஞ்சுகள்?**
**வெட்டி இருந்தது குழி**
**முட்டுப் படுவதே வழி.."**

இப்படியான கவிதைகளின் ஊடாக அவர் மக்களோடு பேசுகிறார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகளும் ஓநாய்களும் என்னும் கவிதையில்

"ஆடுகளும் ஓநாய்கள் போலாக
ஆசைப்படுகின்றன
வழிகாட்டிகளும்..."

ஒன்றன்பின் ஒன்றாக பொய்களைச் சேர்க்கும் போதும், ஒரு தொடர் உபதேசம் நடக்கும் போதும், எமது சிந்தனையிலும் மாற்றத்தை அது கொண்டு வந்து விடுகின்றது. அதனையே இவ்வாறு அவர் கூறுகின்றார்.

அவருடைய நீண்ட பயணம் அனுபவப் பயணம். அடுத்தவருக்கு உதவியாக இருத்தல் அவர்களது கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துக் கொண்டு செல்லும் பாங்கு, இந்த கவிதைகள் எங்கும் நிறைந்து கிடக்கின்றன. நீங்களும் வாசிக்கலாம்.

தோழமையுடன்
**எம்.எஸ்.எம்.நியாஸ்**
ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர்
"நேயம்", "குரல்" ஆசிரியர்
கிண்ணியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை

## வழிகாட்டும் கவிதைகள்

எனது மாணவர் தனபாலசிங்கம் பல்கலைக்கு தெரிவாகி பட்டம் பெற்றதனைத் தொடர்ந்து, பணி நிமித்தம் வெளியிடங்களுக்கு (1990) சென்றதன் காரணமாக தொடர்புகள் மிகக் குறைந்த நிலையில், நீண்ட இடைவெளியின் பின் அண்மையில் அவரை சிற்றிதழ் ஒன்றின் ஆசிரியராக சந்திக்கக் கிடைத்தமை, மிக்க மகிழ்வைத் தந்தது.

மாணவர் தலைவராக, மன்றச் செயற்பாட்டாளராக பேச்சு, விவாதம், கவிதை எனப் பலதுறை ஈடுபாடுடையவராக விளங்கியவர். உயர்தர மன்ற 'வசந்தம் வருடாந்த மலரின்(1979) ஆசிரியராக முத்திரை பதித்தவர். அவருடைய கவிதை நூலுக்கு குறிப்புரை ஒன்றினை வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

நீங்களும் எழுதலாம் என்றால் அந்த எழுத்தில் உண்மை இருக்க வேண்டும். கவிதை சூனியத்திலிருந்து பிறப்பதில்லை. அவை வாழும் சமுதாயத்தின் பின்னணியிலேயே தோன்றுகின்றது. இதனாற்றான் அவர் சார்ந்த சமுதாயம் அவருக்கு ஊற்றுக்கண்ணாகத் திகழ்கின்றது. அறிவுப்பரப்பில் உள்ளுயிரும், உயிர் மூச்சுமாக இருப்பது கவிதை.

ஒரு கவிஞன் அண்மையில் கூறிய ஒரு கவிதை வரி நினைவுக்கு வருகிறது.

"நாளை நிலவு வரும்
நாமிருக்க மாட்டோம்" இவ்வரியில் என்னே! தத்துவம். என்னே! உண்மை. உலகமே இதற்குள் அடங்கியிருப்பது போலத் தோன்றுகிறது.

இவரது நூலின் இரண்டு அம்சங்கள் என்னைக் கவர்ந்துள்ளன. கவிதையின் உயிர் மொழிநடை. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் யாப்பிலக்கணம் கவிஞர்களுக்கு பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இங்கே சொல்லவந்த கருத்துக்கும், அதை வெளிப்படுத்தும் உணர்வுக்கும் ஏற்ப தனபாலசிங்கத்தின் மொழிநடை அமைந்துள்ளமை, ஒரு சிறப்பான அம்சம்.

மேலும் இவரது கவிதைகளைப் படிக்கும்போது மக்களின் சிந்தனையில் கலந்து, அவர்களின் வாழ்வினை அடுத்த கட்டத்திற்கு உந்திநடத்த வழிகாட்டுவதாக, அவை அமைந்துள்ளமை அடுத்த சிறப்பம்சம்.

அவர் கவிதை உலகில் தொடர்ந்து பயணித்து, மாநிலம் பயனுறும் படைப்புக்களைத் தரவேண்டும். நிச்சயம் தருவார்.

பாராட்டுக்களுடன்
**கிருஷ்ணபிள்ளை நடராசா**
ஓய்வுநிலை அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

இதுகாலவரை எனது நூலொன்றினை வெளியிடும் எண்ணம் எனக்கிருக்கவில்லை. பல நண்பர்களின் வேண்டுதலும் எதிர்பார்ப்புகளுமே, இக்கவிதை நூலை வெளியிடத் தூண்டின. முதற்கண் அவர்களுக்கு என் நன்றிகள்.

கலை இலக்கியங்கள் முற்போக்கான சமூகமாற்றத்திற்கான ஒரு சாதனம். அது மனித மனத்தை பண்படுத்தி மனிதாபிமான உணர்வை வெளிக்கொணர வல்ல அழகியலுடன் கூடிய ஒரு கருவி.

தமிழ் இலக்கியத்தில் சங்கம் தொட்டு இன்றுவரை உலகியல் குறித்தும், மனிதம் குறித்தும் பேசுபொருள்கள் தாராளம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்கப் புலவர் கனியன்பூங்குன்றனின் உன்னதமான பாடல் அடிகளில் வெளிப்படும் பேருண்மை எக்காலத்தும் பொருந்தக்கூடியது.

ஆனால் சராசரி மனிதர்கள் தம் முன்னே நிற்கும் நிகழ்காலத்தில் அமுங்கிவிடுகின்றனர். அதனை விட்டு அவர்களால் வெளிவர முடிவதில்லை என்பதே யதார்த்தம்.

நயக்கவும், பரவசப்படவும் தமிழில் போதுமான இலக்கியங்கள் உள. ஆதலின் அவற்றைத் தவிர்த்து சமகால நிலைமைகள் என்ற பகைப்புலத்தில் படைக்கப்பட்ட கவிதைகளே இத்தொகுப்பில் அடங்கி யுள்ளவை.

ஒரு தனிமனிதன் தன் காலகட்டத்தின் நிகழ்வுகள் ஏற்படுத்திய தாக்கங்களை, மன உணர்வுகளை ஒரு சிந்தனை வழிநின்று நோக்கியதன் வெளிப்பாடே இக்கவிதைகள்.

எழுத்து வேறு. எழுத்தாளன் (வாழ்க்கை) வேறு என்ற கருத்திலும் எனக்கு உடன்பாடில்லை. இக்கவிதைகள் எந்தளவிற்கு உங்களை ஈர்க்கும் என்பதும், சிந்திக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டும் என்பதும் மேற்கூறிய எனது கருத்துக்கள் பற்றிய உங்களது நிலைப்பாட்டை பொறுத்ததே. இதைவிட வேறென்ன நான் கூற?

என்றென்றும் என் நன்றிக்குரியவர்கள்

- கவிதைகளை வாசித்து வேண்டிய ஆலோசனைகளை அளித்து, அணிந்துரை வழங்கிய பெருமதிப்புக்குரிய முனைவர் சி.சிவசேகரம் அவர்கள்.

- நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தில் வளவாளராக பயணிக்கும், குறிப்புரை வழங்கிய நண்பர் "நேயம்" "குரல்" ஆசிரியர் பெருமதிப்புக்குரிய எம்.எஸ்.எம்.நியாஸ் அவர்கள்.

- கேட்டவுடன் மறுக்காது குறிப்புரை வழங்கிய என் தமிழ் ஆசிரியரும், பின் அதிபருமான (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்) பெருமதிப்புக்குரிய ஓய்வுநிலை அதிபர் கி.நடராசா அவர்கள்.

- இந்நூலை வெளியிடத் தூண்டுகோலாக இருந்த மைத்துனர் திரவியம் சர்வேசன் அவர்கள்.

- அழகுற வடிவமைத்து அச்சுருவாக்கிய மதுரன் கிறா(f)பிக்ஸ் உரிமையாளர் சு.மகேஸ்வரன் அவர்கள்.

இறுதியாக என் பணியில் ஒத்துழைக்கும் என் குடும்பத்தினர்.

அன்புடன்
**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**
09.07.2023.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

புதிய குழந்தை 1, இரவில் ஒரு மரதன் ஓட்டம் 2, ஒட்டுமரம் 4, உறங்கும் நகரம் 6, இனியொரு யுத்தம் வேண்டா 8, ஏக்கங்கள் 10, பொறுமை காத்திடும் வரை 12, எங்களுக்கான... 14, இங்கிருந்தே... 16, மானுடம் நோக்கிய சுயம் 18, விழிக்குமா எம்தேசம்? 20, கிறுக்கர்களும் கிறுக்கல்களும் 22, உனக்கான அடையாளம்? 24, ஆடுகளும் ஓநாய்களும் 26, தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள் 28, மீட்பின் பெயரால் 30, அலங்கோலமாய் 32, புதிய ஜனநாயகமே 34, வெற்றுப் பிதற்றல்கள் 36, தகுதி 38, தூசு படியும் காற்று 40, எல்லாமுமாகுக! 42, எங்கள் காவலர்கள் 44, சரியெனப்பட்டது 46, அவதி 47, அடக்கம் 48, மிச்சம் 50, திருவுடையார் எனப்படுவோர் ஆடல் 52, போலப்படுபவை 54, நவநவமாய் புலராப் பொழுது 56, இன்றைய விநோதங்களில் 58, ஏக்கப்புள்ளிகள் 60, கொடிய சாபம் கொவிட் 62, பெரும் கதிரைகள் 64, என்றுதானோ? 66, அகம் பெயர்தல் 68, வேர்கள் 70, பலிபீடம் 72, வழி 74, ஒரு தருணம் 76.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய குழந்தை

*காய்ந்த வயிறுகளில்
எரியும் ஆத்மாக்கள்
புதிய குழந்தையொன்றை
ஜனிப்பதற்கு
தயாராகின்றன.*

*விடிவுதேடி நடக்கையிலே
விளக்குப் பிடிப்பாரின் தடுமாற்றம்
இடையிடையே பயம் காட்ட
தெளிவான சிந்தனைகளின் வழிகாட்டல்கள்...*

*ஊழிக்காற்று வீசி விளக்கை அணைக்க
இருட்டினிலே
கற்களதும் முட்களதும் வரவேற்புகள்.....*

*செங்குருதி வெள்ளம் பாய்ந்து
சதைப்பிண்டங்கள் வீழ்ந்து மாய
அழுக்கு நாற்றங்கள்
துடைத்தெறியல்கள்...*

*எத்தனையோ ஜீவன்களின் விடிவுக்காக
புதிய குழந்தையொன்றின் ஜனனம்.*

**சமர் - 1979**
**செப்ரெம்பர்**

புதிய குழந்தை : சமத்துவ சமுதாயம் (உருவகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவில் ஒரு மரதன் ஓட்டம்

இது
இரவு அல்ல
கோரமான இருட்டு
இந்த மண்ணில்
பாவம் செய்ததைப் போல
அவதிகள்!

இந்த மனிதர்கள்
தூங்கவில்லை
தூங்குவதைப் போல்
துவள்கிறார்கள்!

எங்கேயொரு தீப்பொறி பறந்து
அழித்து விடுமோ இந்த மண்ணை
என்பது போல
இந்தக் கோர இரவிலும்
அகோர வெக்கை!

இரவுத் தூக்கங்களுக்கு
தொற்று நோய்
தூக்க மாத்திரைகளுக்கு
சிவத்தக் கொடிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*படுக்கையிற் கிடந்த போதும்*
*கால்கள்*
*தயார் நிலையில்!*

*தேவையான பொக்கிஷங்களில் ஒரு சில*
*தற்காலிக இருப்பிடங்களில் தயாராய்!*

*கத்தியில் நடப்பதைப் போல அந்த வேளையிலும்*
*நிதானமாக*
*தசைகள் பிடித்து*
*உரம் பெற வேண்டிய*
*சின்னஞ் சிறிசுகளும்*

*ஆம்*
*ஒரு சத்தம் கேட்டதும்*
*ஓட வேண்டும் நீண்ட தூரம்*
*அந்த இருட்டிலும் மரதன் ஓட்டம்.*

**1990 - வீரகேசரி**

1987 யாழ் . வடமராட்சி இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மக்களின் நிர்க்கதி நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டு மரம்

*ஒட்டு மரத்தில் ஒரு சில முற்றல்கள்*
*சுத்தமாய் முற்றையும்*
*சுகித்துக் கொண்டிருந்தன!*

*சாரம் இருந்த வரை*
*சந்தோசம் முற்றல்களுக்கு!*
*பிஞ்சுகளை மறந்து*
*பேசிக் குலாவின!*
*ஊதாரித்தனத்தில் ஊறிக் கிடந்தன!*

*வேர்கள் அறுபட்டு*
*வெய்யில் படப் பட*
*வாடத்தொடங்கிற்று மரம்!*
*காற்று மேலெழ*
*கருகத் தொடங்கிற்று இலை!*

*பிஞ்சுகள் நெஞ்சில் எப்படி*
*புகுந்தன நஞ்சுகள்?*
*முற்றல்கள் சுட்டின விரல்களால்!*
*வீழ்ந்தே போயின வெறுமையாய்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெட்டியிருந்தது குழி!*
*முட்டுப்படுவதே வழி!*
*ஒட்டு மரப்பிஞ்சுகள்*
*ஒன்றுடனொன்று மோதின!*
*ஒன்றா....? இரண்டா....?*
*பிஞ்சுகள் காய்களாகியும்*
*குழப்பமே குழப்பம்....!*

*நன்றென ஒன்றுபட்டு*
*ஒரு முடிவெடுத்து*
*ஒட்டுமரத்தை*
*ஒன்றெனக் காக்குமா*
*காய்கள்?*

**சுடரொளி - 26. 03. 2006**

ஒட்டுமரம் : பல்லின இலங்கை (உருவகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறங்கும் நகரம்

சுருங்கிவிட்ட சுறுசுறுப்பான உலகில்
அடங்கி விட்டது எனது நகரம்
உறங்கும் நகரமாய்.

வெட்டுவதற்கு வெட்டிகளும்
இறக்குமதியான பிரதேச நகரொன்று
நிகழ்தகவுக் கொலைகளும் நிகழலாம் என்பதால்
பகலிலேயே தூங்கிக் கொண்டிருக்கிறது
எனது நகரம்.

என் இதய நரம்புகள் அறுபட்டுக் கிடக்கின்றன
நண்பர்கள் சந்திப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு
பகல் பன்னிரண்டுக்கு முன்னதாக
முழு நடவடிக்கைகளையும் முடக்கிவிட
எனது நகரம் உறங்கும் நகரமாய்.

வெடிக்கலாம் என்பதால்
எங்கும் நம்பி காட்டமுடியவில்லை
தலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பட்டாம் பூச்சியை*
*போத்தலுக்குள் அடைத்தது போல...*
*என் முற்றத்துக் காற்றும்*
*அடைபட்டுக் கிடக்கிறது.*

*உறங்கும் நகரில்*
*என் எண்ணச் சிறகுகள்*
*நம்பிக்கை இழையில்*
*விழிப்பாய்*
*அசைந்தே செல்கிறது.*

**28. 05. 2006 ஞாயிறு தினக்குரல்**

வன்முறை உச்சமடைந்த வேளைகளில் நகர்ப்புறங்களின் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியொரு யுத்தம் வேண்டா!

*இனியொரு யுத்தம்*
*என்றுமே வேண்டாம்!*
*இழப்புகள் போதும்*
*இனித்துயர் வேண்டா!*

*விஞ்ஞான விந்தைகளை*
*அழிவினில் காண வேண்டா!*
*பூமித்தாயின் வயிற்றில்*
*புதைந்தே கிடக்கும்*
*புதுமைமிகு கனியங்கள்*
*தாயின் மேனியை*
*கீறிக் கிழிக்க வேண்டா!*

*உலோக சேர்வைகள்*
*உயிரின் சேர்வைகளை*
*நிராகரிக்க வேண்டா!*
*நிலப் போர்வை எரிந்து*
*ஹீரோஷீமாவாகி*
*வருங்காலச் சந்ததியின்*
*உயிர்ப் போர்வைக்கு*
*ஊறுவிளைவிக்க வேண்டா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விண் நோக்கிய கட்டிடங்களும்*
*வீடுகளும்*
*மண்நோக்கி*
*முத்தமிட வேண்டா!*
*தஞ்சம் கொடுத்த பாவத்திற்காய்*
*பாடசாலைகளும் ஆலயங்களும்*
*தரைக்கு இறக்கப்பட வேண்டா!*

*பிணவாடை எங்கும்*
*பிறப்பிக்கப்பட வேண்டா!*
*அகதிகள் என்று யாரும்*
*அடையாளமிடப்பட வேண்டா!*
*சொந்தங்களை இழந்து யாரும்*
*சோகப்பட வேண்டா!*
*மானுடம் தழைத்திட*
*இனியொரு யுத்தம் வேண்டா!*

**16. 07. 2006**
**ஞாயிறு தினக்குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏக்கங்கள்

ஒவ்வொரு விடியலிலும்
உத்வேகம் கொள்ளும் என் மனம்
இன்றைய பொழுதாவது...
நாட்கள் கணங்களாகி
மனதைவிட வேகமாய் நிஜங்கள்
நிம்மதிப் பெருமூச்சொன்று வந்து போவதற்குள்
எங்கேனும் ஒன்று....

குச்சொழுங்கையில்!
குப்பை மேட்டில்!
நட்ட நடுநிசியில்!
பட்டப் பகலில்!!
குடும்பமாய் கூண்டோடு
பச்சிளம் பாலகரும்.

அடிக்கடி செத்துப் பிழைக்கும்
என் உத்வேகம்
ஒரு கனவாய்
எங்கோ ஒரு தொலைவில்
ஒரு தெருவில்
ஒரு வெளியில்
அநாதைகளைப் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பறிக்கப்பட்ட உறவுகளின்
அந்தப் பொழுதுகள்
கண்ணுக்குள் வந்து
மௌனத்தைக் கலைக்கும்
மௌனங்களாய்!
சிந்தனையின் விஷக்கலப்பாய்!
நீரில் அமுக்கப்பட்ட பஞ்சாய்!
நினைப்பதற்கு முன்பாக
மூச்சற்றுப் போனவர்களின்
ஏக்கம் இடம்மாறியதாய்
என் மனதில் !

அரிது அரிதென
இவ்வுலகில் பிறப்பெடுத்த
அப்பாவி மனிதர்கள்
ஆவியுயிர்க்கப்படுவதால்
கருக்கட்டப்போவது
எந்த மேகம்?

**24.09.2006 - ஞாயிறு தினக்குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுமை காத்திடும் வரை

*கதவைத் தட்டும் போது*
*சாளரங்களை!*
*சாளரங்களைத் தட்டும் போது*
*சாவித்துவாரங்களை!*

*அவிழ்க்க முடியாத*
*பொதிகளை!*
*ஓட்டை ஒடிசலான*
*ஆலோசனைகளை!*
*காலங் கடத்தும்*
*சர்வகட்சி மாநாடுகளை!*

*ஒரு கை இணங்கியதை*
*மறு கையால் மறுதலிக்கும்*
*நீதிமன்றுகளை!*

*பாதை மூடப்பட்டதால்*
*பட்டினி அவலத்தில் பரிதவிக்கும் மக்களுக்கு*
*அனுப்பிய பொருட்களின்*
*மனிதாபிமானப் பட்டியல்களை!*
*கோடை மாரிக் கொடுந் துயரில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அப்பாவிகளின்*
*முகவரி தொலைக்கும்*
*முகாம்களின் பெருக்கங்களை!*

*உரிமை தட்டிக் கேட்போர்*
*உயிர்கள் பறிக்கப்படுகையில்*
*இடைநடுவில் நின்றுவிடும்*
*விசாரணைக் கமிஷன்களை!*

*வசதித் தொழிற்சாலையில்*
*கூடுதல் பிரிதலை*
*கூட்டணி அமைத்தலை!*
*உறுப்புரிமை ஒன்றிலும்*
*பதவிகள் இன்னொன்றிலுமாய்*
*சிறப்புரிமை பெறுவோரை?*
*உதாரண புருஷர்களென*
*பெருமைப்படுதலை!*

*நடத்துக....*
*இனமோதலின் பேரால்!*
*அனைத்தையும் மறுதலிக்கும்*
*துரியோதனத்துவம்*
*தொடர்க...*

**01. 07. 2007 - சுடர்ஒளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களுக்கான...

எங்களது வாய்களும்
சில சமயத்து கண்களும்
எங்களுடையவை என்பதால்
(குறைந்தபட்சம்)
எங்களுக்கானவை பற்றியும்....

இருட்டில்!
இலாததைத்தேடுவதில்!

நிலவுக்குப் போனமை
இறந்த காலமாயிற்று
கூடவே
காதுகளும் இருப்பதால்!
எஞ்சியிருப்பவை....
................................?

தவழாமலே நடப்பது பற்றி
ஆராய்ச்சி செய்யாமலே
கண்டுபிடிப்பது பற்றி
எதையோ கிறுக்கி
உச்சங்களைத் தொடுவது பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்களுக்கான*
*அதிக பட்ச கவலை*
*கதிரைகள் பற்றியதே!*

*எச்சரிக்கை.....!*
*எங்களிடம்*
*கத்தரிக்கோல்களும் உள்ளன.*

**நீங்களும் எழுதலாம் - I**
**பங்குனி - சித்திரை 2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிருந்தே....

இங்கிருந்தே... ஆரம்பிக்கும் என்
ஒவ்வொரு நகர்வும்
என்னைச் சுற்றியுள.....

என் கால்கள்
வரையறைக்குள் வளைந்துவரக்
கட்டப்பட்டுள்ளதாய் உணர்கிறேன்
கைகளை அசைத்துப் பறப்பது பற்றிய
கனவொன்றுளதாயினும்
கால்கள் பற்றிய பிரக்ஞை
என்னிடம் வலிதாகவேயுளது.

சிலரது உதடுகளிலிருந்து
உதிர்கின்ற தத்துவங்களும்
(வ)சதித் தத்துவங்களாக....

புதைந்த அத்திவாரக் கற்களில்
உயர்ந்து (சமூகத்தை) விட்டவர்களின்
உன்னத பிரமிப்புகள் பற்றிய கேள்விகளும்
என்னிடமெழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்படவும் பொறாமைப்படவும்
யாதுளவாயினும் - ஒரு சிலர்
பெயர் பொறிப்பதற்காய்
பாமர மக்களைப் பலிக்கடாக்களாக்கும்
பரிதாபங்களும் மனதைப்
பரிதவிக்க வைக்கின்றன.

இங்கிருந்தே அனைத்தும்
எடுக்கப்பட்டன - அதிசயம்
ஒருசிலர்
தங்களுக்கு அடிக்கும் பொல்லை
தங்களுக்கடியில் வைத்திருப்பதுதான்.

உளர் - இலர்
இவர்களுக்கிடையிலான போராட்டமே
உலக வரலாறாயிருக்கிறது.

நான் தேடுகிறேன்
எழுதப்படாதவர்களின்
எழுதப்படாதவைகளின்
வரலாற்றை.

**நீங்களும் எழுதலாம் - 02**
**வைகாசி - ஆனி 2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடம் நோக்கிய சுயம்

*இப்படியும் அப்படியுமாய்*
*அலைக்கழிதல்கள்!*
*ஒவ்வொரு செயற்பாட்டினூடும்*
*தூரதிருஷ்டியற்றோரின்*
*விவஸ்தையற்ற அடையாளப்படுத்தல்கள்!*

*நிறைகள் நிறுக்கும் தராசுகளில்*
*குறைகள் நிறுக்கப்பட்டு*
*இருப்புக்கள் சார்ந்து*
*வேகங்கொள்ளும் ஆர்ப்பரிப்புகள்!*

*தன் மூக்குப் போனாலும்*
*மற்றோர்க்கு சகுனம் பிழைக்குமென்று*
*அவஸ்தை கொடுக்கும் அநாகரிகத்தனங்கள்!*
*பற்றுதல்களைப் பற்றி எரியவைக்கும்*
*பாசாங்குப் பற்றாளர்களின் வெறித்தனங்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய போது தற்காத்தலுக்காய்
சமுதாயச் சாக்கடையில் பிரசவிக்கப்படும்
பல்வகை முகமூடிகள்!
தட்டியெழுப்ப முடியாதபடிக்கு
அனைத்தும் கைப்பிடிக்குள் என்ற
ஆதிபத்திய இலக்கில்
கனவு காணக் கிடைத்திருக்கும்
கற்பனை வாய்ப்புகள்!

களமுனைக் கொடூரத்திலும்
எண்ணிக்கைக் கணக்கில்
காட்டப்படும் ஈடுபாடுகள்!
வந்தேன் கண்டேன் வென்றேன் என
வெற்றிக்கம்ப இலக்கில்
அதிகார வர்க்கத்தின் சிருஷ்டிப்பாய்
எத்தனையோ பலி பீடங்கள்!

இவற்றிடையே
என்னுள் வீறாய் எழும்
மானுடம் நோக்கிய சுயம்!

**நீங்களும் எழுதலாம் - 03**
**ஆடி - ஆவணி 2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிக்குமா எம் தேசம் ?

புதைகுழியை நோக்கும்
எம் தேசத்து ஆன்மா.

விழிக்குமா எம் தேசம்
இனி ஒன்றுமில்லை
எனு முன்பாக!

ஆயிரங்காலத்து
மனித விழுமியங்கள்
அடக்கப்படு முன்பாக!

பரிநிர்வாண மைந்தர்களின்
பிணநிர்வாண ஊர்வலம்
புதிய விழுமியமாகு முன்பாக!

இவர்களின் மரணத்தில்
அவர்களும்
அவர்களின் மரணத்தில் இவர்களும்
பட்டாசு கொளுத்தி மகிழ்ந்திடும்
புதிய கலாசாரம்
வேரூன்று முன்பாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைந்து போனவர்கள்
என்றொரு தொகுதி
தோன்றி விடுவதற்கு முன்பாக
அகதி என்றொரு புது இனம்
அடையாளப்பட முன்பாக!

தொலைந்து கொண்டிருக்கும்
நிகழ்காலத்துள்
எதிர்காலமும்
புதைய முன்பாக!

பொது நலனுக்காக
வாழ்வை அர்ப்பணித்த
தியாகிகளின் ஆத்மாக்கள்
சாந்தியிழந்து
தத்தளிக்கு முன்பாக!

தமிழ் முஸ்லீம் சிங்களம்
என்றொரு மாயை கலைந்து
விழிக்குமா எம் தேசம்?

நீங்களும் எழுதலாம் - 04
புரட்டாதி - ஐப்பசி 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறுக்கர்களும் கிறுக்கல்களும்

*வீரியம் மிக்க*
*கனவுகள் நிறைந்த*
*உலகமே கைப்பிடிக்குள்*
*இருப்பதான*
*உணர்வுப் பருவங்களில்*

*அழுக்குப் படியாத*
*வெற்றுக் காகிதங்கள்*
*கிறுக்கர்களுக்கும் பொதுவானவை.*

*உணர்வுகளை*
*உணர்ச்சிகளை*
*கொள்கைகளை*
*கோட்பாடுகளை*
*வேரூன்றச் செய்து விட்டதான*
*வெற்றுப் பிதற்றல்களுக்கும்*
*வீறாப்புகளுக்குமிடையே*
*நிறம் மாறிப் போவதும்*
*திசை மாறிப் போவதும்*
*தெளிவற்ற நரைப்பீடங்களின்*
*தொடராகிப் போவன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உடன்படாது*
*உறுதியாயிருக்கையில்*
*வளர்த்த கடா மார்பிலெனும்*
*மேதமைச் சரடுகளினூடு*
*மறைந்து போவதாக*
*வேலியே பயிரை மேய்வதான*
*உண்மைகள்.*

*தொடர் இழப்புகளினூடு*
*தக்க வைத்துக் கொள்ளும்*
*சூட்சுமங்களோடு*
*வருங்காலத்தை கேள்விக்குள்ளாக்கி*
*இருளுக்குள் தள்ளுவதாக*
*உயிரின் தத்துவம் உயிர் எனும்*
*உயிரியல் தத்துவம் பிழைப்பதான*
*மலட்டுத்தன்மை மிகுந்து*

*எழுந்த மானமும்*
*விழுந்த பாடுமாய்*
*கதையளக்கும்*
*வாய்வீச்சுக் கைங்கரியங்கள்.*

*கிறுக்கர்களே*
*நோக்கத்தோடும் மார்க்கத்தோடும்*
*இணைந்திடுங்கள்*
*நீங்களும் வரலாறு எழுத.*

**நீங்களும் எழுதலாம் - 6**
**முதலாண்டுச் சிறப்பிதழ் - 2008**

இளைஞர்கள் அழுக்குப் படியாத வெற்றுக் காகிதங்கள் போன்றவர்கள். அவர்களிடம் பிழையான கருத்துக்களை விதைக்கும் நெறியற்ற சில பெரியவர்களின் செயற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கான அடையாளம்...?

*பதவிகள் பெரிதில்லை என்பாய் - ஆயினும்*
*கதிரையை விட்டுக்*
*கணமேனும் கிளம்புகிறாயில்லை*
*நிலையாமை பற்றி நித்தமும் ஓதிக்கொண்டே*
*உன் நிலையை உறுதி செய்து கொள்கிறாய்*
*அரட்டை அடிக்கையில்*
*அடிக்கடி உதிர்ப்பாய் மனப்பாங்கு பற்றி*
*ஆயினும்*
*கணக்குப் பார்க்கிறாய்*
*மனிதாபிமானப் பணியில் ஒரு மணி செலவிட*

*வருங்காலங் குறித்த எதிர்காலவியலிலும்*
*ஆர்வங் கொண்ட*
*தீர்க்க தரிசியுமாவாய் இடையிடை*
*ஆயினும்*
*உன் அனுபவிப்புகளில் சற்றும் தளர்ச்சியில்லை*
*அனைத்து அதிகாரங்களையும்*
*கேள்விக்குள்ளாக்க வேண்டுமென்பாய்*
*சிலவேளை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் உன்
அதிகாரத்தைச் சுகித்துக் கொள்வதில்
ஆனந்தமடைவாய்!
உனக்கு, முன் முகம் தெரிவதும்
பின் மனந்தெரிவதும்
வழக்கமானதொன்று
நீ தட்டும் பின் கதவுகள்
ஒன்றா? இரண்டா?

கேட்கும் போதெல்லாம் தந்திரோபாயம் என்கிறாய்
இத்தனை இத்தனை....
சுட்டிய பின்பும்
என்ன வேடிக்கை
நீ கூறுகிறாய்
உனக்கோர் அடையாளம் இருப்பதாய்...!
மீண்டும் மீண்டும்
காற்றடிக்கும் திசையில் பயணித்தவாறே....

**நீங்களும் எழுதலாம் - 07**

**வைகாசி - ஆனி 2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடுகளும் ஓநாய்களும்

ஆடுகள் நனைகின்றனவென்று
அழுவதுண்டாம் ஓநாய்கள்
சில இடங்களில்
ஆடுகள் தம் காவலுக்கு
ஓநாய்களை
நியமித்து விடுவதுமுண்டு
அந்தளவுக்கு இந்த ஓநாய்கள்
அலங்கரித்துக் கொண்டும்
அதிநவீன விஞ்ஞானச் செழிப்பால்
பூரித்தும் உள்ளன.

நனையும் ஆடுகளுக்கு
இந்த ஓநாய்கள்
அவ்வப்போது
ஆடுகளின் தோல்களையே
குடைகளாக்கி
அன்பளிப்பதுண்டு
இறுதியாக கொடுத்திருக்கும்
உலகமயமாதல் பெருங்குடை
ஐம்பொறிகளுக்கு தீனி போட்டு
ஐக்கியப்படுத்தி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தினமும் ஓநாய்களின்*
*உபதேசங்களைக் கேட்டுக் கேட்டு*
*ஆடுகளும் ஓநாய்கள் போலாக*
*ஆசைப்படுகின்றன*
*வழிகாட்டிகளும்*
*வழங்கப்பட்ட குறிப்புகளும்*
*வரப்பிரசாதங்களாக....*
*சேவகம் செய்வதன்*
*மேன்மை குறித்த*
*பிரமிப்புகளும் புளகாங்கிதங்களும்.*

*ஆடுகள் வகைப்படுத்தப்பட்டு*
*வண்ணங்கள்*
*அப்பப்படுகின்றன*
*வண்ணங்களுக்கேற்ற கூடுகளும்!*

*இப்போது*
*ஆடுகள் தமக்குள்*
*அடிபட்டுச் சாகின்றன.*

*ஓநாய்கள் புனிதர்களாக....*

*ஆடுகள் ஆடுகளையே*
*படையலிடுகின்றன.*

**நீங்களும் எழுதலாம் - 08**
**ஆடி - ஆவணி 2008**

'உலகமயமாக்கல்' மூலம் ஆசை காட்டி, முரண்பாடுகளை ஏற்படுத்தி ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் தம்மை நிலை நிறுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள்

*எங்கள் நிலமும்*
*எங்கள் நீரும்*
*எங்கள் காற்றும்*
*எங்கள் ஒலியும் ஒளியும் கூட*
*கலப்படமாக...*

*அந்திப் பொழுதில்*
*பயிர் விளைவிக்கும்*
*பருவம் தப்பியவர்களாய்....*

*அத்திவாரங்கள் மீதான பிரக்ஞை*
*ஏதுமற்று*
*கோபுரங்கள் மீதான கனவில்*
*இலயித்துப் போகிறவர்களாய்....*

*இரத்தத்தில் ஊறிப்போன*
*எஜமான விசுவாசத்தில்*
*சற்றேனும் சளைத்தவர்களல்லர்*
*என்பதை*
*பொறுத்த தருணங்களில்*
*காட்டிவிடுகின்றவர்களாய்....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*போதனைகள் யாவும்*
*தாரக மந்திர உச்சாடனங்களாய்...*

*எங்களுக்கான அனைத்தும்*
*பரிந்துரைகளின் மீதே*
*கட்டியெழுப்பப்படுகின்றனவாய்...*
*ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும்*
*உள்ளாக்கப்பட்டு*
*அங்கலாய்த்துத் திரியும்*
*அற்பக் கூட்டங்களாயின பின்*
*விற்பனையாகின்றன*
*தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள்!*

*தனித்தேனும்*
*பலர் கூடியேனும்*
*மீண்டெழாத படிக்கு!*

**நீங்களும் எழுதலாம் - 09**
**கார்த்திகை - மார்கழி - 2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்பின் பெயரால்

*உறுதியான உடலிலிருந்தும்*
*உயிர் ஒரு நொடியில் காவு கொள்ளப்படலாம்!*
*அன்றேல்......*
*கால்கள் கழற்றப்படலாம்!*
*கைகள் அகற்றப்படலாம்!*
*ஏன்*
*கைகளும் கால்களும் துண்டற அற்றுப்போகலாம்!*
*நிறைமாதக் கர்ப்பிணியின்*
*இரு கால்களையும் வெட்டியெறியலாம்!*
*புண்களில் தசைகள் அழுகுண்டு*
*புழுக்கள் விளையலாம்!*
*பச்சிளம் பிஞ்சுகளும் படுகாயத்திற்குள்ளாகி*
*ஆதரவற்றுத் தவிக்கலாம்!*
*உடலெங்கும் எரிந்து எவரும்*
*அடையாளமிழந்து போகலாம்!*
*உறவுகள் தொலைந்தும் வேலியிடப்பட்டும்*
*உருக்குலையலாம்!*

*மரங்களை வெட்டி வீழ்த்தும் மனப்பூரிப்பில்*
*கங்கணங் கட்டிக்கொண்டு*
*வேர்களை ஆகாயத்திலும் தேடி அலையலாம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முகாங்களைப் பெருக்கி முகவரிகளை அழிக்கலாம்!*
*நச்சுவாயுக்களின் நாற்றத்தில் நாடு பாலைவனமாகலாம்!*
*எச்சங்கள் ஊனமுறுவது என்றென்றும் தொடரலாம்!*

*ஒவ்வொரு கிளர்விலும் இடப்படும் புள்ளிகளை*
*முற்றுகள் என்று*
*எடுப்பார் கைப் பிள்ளைகள்*
*குதூகலிக்கலாம்!*

*மீட்பர்களே!*
*நாம் சுமக்கும் சிலுவைகளால்*
*உங்களுக்குக்*
*கதிமோட்சம் கிடைக்கட்டும்!*

**நீங்களும் எழுதலாம் - 10**
**தை - மாசி - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கோலமாய்

விடுதலை வாசல்
துகிலுரிந்து வரவேற்கிறது.

ஒவ்வொரு உபசரிப்பும்
உடல் புகுந்து
துழாவியெடுக்கிறது தன்மானத்தை.

ஒப்பாரி ஓலம்
உலுப்பிவிட்டதான பாவனையில் வரங்கொடுக்க
சன்னிதிகளை விட்டு சந்திக்கு வந்திருக்கின்றன
சில சாமிகள்.

பூசாரிகள்
பூக்களைச் சொரிந்து கொண்டு
அடிவருடி அடிவருடி ஆருடம் சொல்கிறார்கள்.

ஏதோ பார்த்து நாலுவார்த்தை
அளந்து விட்டுப்போனால் கூட
அந்தச் சாமிகள்
அந்தஸ்தில் உயர்ந்து விடலாம் என எண்ணுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*துடுப்பில்லாப் படகுகளும்*
*கரைசேர்வதுண்டு*
*நல்லது நடக்க நல்லோர் நினைப்பதுமுண்டு.*

*கண்ணை மூடுகின்ற*
*ஒவ்வொரு நொடியிலும்*
*தன்மானத்தை இழந்து.... இழந்து.....*
*குறுகிப் போகிற மனிதர்களின்*
*அந்தப் பொழுதுகளில்*
*நானும் கரைந்து போகிறேன்.*

**நீங்களும் எழுதலாம் - 11**
**பங்குனி - சித்திரை - 2009**

போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு அதை ஆதரித்தவர்கள் சிலரின் நிலைப்பாடும்., சமூக ஆர்வலர்களின் மன உளைச்சலும், ஆதங்கங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஜனநாயகமே

*சேவைகள் இங்கே*
*கைநீட்டிப் பழகிச்*
*சேவகம் செய்கின்றன!*

*முறைப்பாடுகள் விண்ணப்பங்கள்*
*காரியாலயங்களில் முடங்கிக் கொள்கின்றன!*
*திட்டங்கள் திண்டாடுகின்றன!*
*சமத்துவம் கூறும் சட்டங்களில்*
*ஓட்டைகள் சமைக்கப்படுகின்றன!*

*கதிரை இலக்குகள்*
*கண்டதையும் பேசவைக்கின்றன!*
*மீட்சியில்லா கருத்தியல்கள் மீண்டெழுகின்றன!*

*மொழிப்பற்றில்*
*இனப்பற்றில்*
*மதப்பற்றில்*
*ஊர்ப்பற்றில் என...*
*பற்றுகளிலெல்லாம் திட்டமிட்டே*
*பறறாக்குறைகள் பற்றவைக்கப்படுகின்றன!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பற்றியதெல்லாம்*
*வெறியாகி... வெறியாகி...*
*கடும் புயலுக்குள் சிக்குண்ட திரியின் ஒளியாய்*
*எமது வாழ்க்கை!*

*விரும்பியதைச் செய்யலாம் என*
*விதந்தோதப்படுகின்ற*
*இந்த ஜனநாயகம் வேண்டாம் தோழனே*
*புறப்படுவாய்*
*"புதிய ஜனநாயகம்" சமைக்கவென.*

**நீங்களும் எழுதலாம் - 12**
**வைகாசி - ஆனி 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றுப் பிதற்றல்கள்

எய்கிறீர்கள் அம்புகளை
உபாதை தீர்க்கும்
வெற்று உத்திகளாக....

தலைகளென்று
தலைப்பாகைக்கு
குறி வைப்பதால்
தலைகளோ தம்மை
சுதாரித்துக் கொள்கின்றன.

பதவிகளுக்கும் உயர்வுகளுக்கும் விலை போவதால்
சீரழிவுத் தலைமைகளும் எதேச்சதிகார பீடங்களும்
நிர்ப்பீடணம் பெற்று விடுகின்றன.

"ஆக்கவும் மாட்டோம்
ஆர் குற்றியேனும் ஆகட்டும் என
விடவும் மாட்டோம்"
என அடம் பிடிப்பதில்
அநியாயங்கள் தொடர்ந்தும் அரங்கேறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெண்ணெய் திரண்டு வருமாப் போல் இருக்கையில்*
*தாழி உடையக் காரணமாய் இருந்து கொண்டு*
*வேண்டாத சித்தாந்தமென்று குறைபட்டுப் புலம்புகிறீர்.*

*போர்வைகளே இல்லையென்பீர்*
*சமயம் வந்தால் போர்த்துக் கொள்வீர்*
*பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக...*
*என்னதான் ஐயா - நீவீர்*
*பண்ணிக்கிழிக்கப் போகின்றீர்?*

**நீங்களும் எழுதலாம் - 13**
**ஆடி - ஆவணி - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகுதி

காகங்கள்
தமக்கென்று தனித்துவமாய்க்
கூடு கட்டிக் கொள்கின்றன
எப்படி என்னவென (வாம்).

காகங்கள்
ஒன்று கூடுகின்றன (வாம்)
கூடிக் கதைக்கின்றன (வாம்)
அச்சமின்றி கருத்துரைக்கின்றன (வாம்)
ஆதலினால் - கூடு கட்டத்
தெரிந்து கொள்கின்றன (வாம்).

காகங்கள்
கூரிய அலகுடையவை யாயினும்
தன்னினத்தை
கொத்திப் பார்க்க நினைப்பதில்லை (யாம்)
ஆதலினால்
கூடி வாழத்தக்கன (வாம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காகங்கள்*
*கட்டிய கூடொன்று*
*கல்லெறிபடக் கண்டால்*
*எதிரிகளை*
*சூழ்ந்து விடுவனவாதலினால்*
*ஒன்றுபடப் பயின்றுள்ளன (வாம்).*

*காகங்கள்*
*உயிரிழந்து போயின்*
*அருகதனில் ஒன்று கூடி*
*சோகத்தை பகிர்கின்றன (வாம்)*
*ஆதலினால் - முற்றமொன்றமைக்க*
*முதிர்ச்சி பெற்றன (வாம்).*

*காகங்கள்*
*ஒன்று மற்றையதன் துன்பத்தில்*
*இன்பம் காண்கின்ற*
*ஆதிக்க மனோபாவம்*
*கொண்டிருப்பதில்லை (யாம்)*
*ஆதலினால்*
*அடிமை வாழ்விலிருந்து*
*விடுபட்டு விடுகின்றன (வாம்).*

**நீங்களும் எழுதலாம் - 14**
**கார்த்திகை - மார்கழி - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூசு படியும் காற்று

"எல்லாம் சுபம்" என
அறையப்படுகின்ற இன்றைய பொழுதுகளில்
விக்கித்து விம்மி நிற்கும் நேற்றைய காற்று.

நாட்கள் குறிக்கப்பட்ட நகர்வொன்றில்
வேர்கள் பிடுங்கப்பட்டு
வேற்றாகி நிற்குமிப் பொழுதுகளில்
அந்த மரங்களைத் தழுவிய காற்று
மணம் குணமற்று சோபை யிழந்து போய்க் கிடக்க,

திசை மாறிய காற்றை
வாழ்த்தி வரவேற்றவர்கள்
சுழல் காற்றாக
பிள்ளையார் சுழி போட விரிந்த காற்று
குறுகிச் சென்று
அந்த மண்ணில் நிலைத்து
இன்றைய பொழுதுகளில்
பிணங்களினதும் புதைக்கப்பட்ட மரபுகளினதும்
உறைவிடமாகி அந்தரித்து நிற்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேர்களற்று பிடிப்பற்றுப் போன அந்தமண்*
*தொட்டுக் கிளம்பிய காற்று எந்த மண்ணிலும்*
*தன் மணத்தைப் பரப்பிய*
*காலமொன்றிருந்ததோ என*
*எண்ணும் படியாக...*

*நாறும் அழுகல்களை பிசுபிசுப்புகளை*
*வருடிக்கொண்டே*
*பெரும் பரப்புகளை ஆக்கிரமித்து*
*வீசுவதாக...*

*"முப்பதாண்டுகளின் பின்*
*முதன் முதலாக..."*
*என்னைத்தை வைத்தேனும்*
*உல்லாசம் அனுபவிக்கத் தெரிந்த வியாபாரக் காற்றுகள்*
*அன்று - இன்றென்ன*
*என்றும் இப்படித்தான்...*

**நீங்களும் எழுதலாம் - 15**
**தை - மாசி 2010**

போராட்டத்தை உசுப்பேற்றிய சிலரின் மௌனித்தபின்னரான சந்தர்ப்பவாத நிலைப்பாடு.(சுதந்திரக் காற்றை சுவாசிப்பதாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாமுமாகுக!**

*சகல படித்தான மௌனங்களும்*
*இதோ*
*உங்களைப் பேசவைக்கின்றன*
*எங்களுக்காய்*
*அட்சய பாத்திரங்களைப் பரிந்துரைக்கின்றீர்.*

*ஒரே கல்லில் பல மாங்காய்களை*
*வீழ்த்தி விட்டதான பூரிப்பில்*
*இனி நீங்களே எல்லாமுமாகுக!*

*எங்கள் குரலாக நீங்களே ஒலிப்பீர்களாம்*
*அனைத்தையும் நிர்மூலமாக்கிவிட்டதான*
*நிம்மதிப் பெருமூச்சோடு*
*இனி நீங்களே எல்லாமுமாகுக!*

*கன்னை பிரித்து*
*ஆடியதில்*
*கால்கள் நோவு கண்டிருந்தாலும்*
*கவனத்தை திருப்புவதில் கருத்தாய் செயற்பட்ட*
*கைங்கரியக்காரர்களே*
*இனி நீங்களே எல்லாமுமாகுக!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தெற்கிலோ வடக்கிலோ*
*இனி எதுவும் எழும்பா*
*அந்தவழி இனி யாரும் ஏறெடுத்தும் பாரார்*
*ஒரு பேச்சுக்குத் தன்னும் மூச்சு விடமாட்டார்" என*
*மனப்பால் குடிப்பவர்களே எல்லாமுமாகுக!*
*ஆம்! சற்றே காலம்!*

**நீங்களும் எழுதலாம் - 16**
**பங்குனி - சித்திரை - 2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் காவலர்கள்

அற்ப சொற்ப நம்பிக்கையோடு
ஒரு சிலர்
அந்தர வெளியில்
அடிமுடி தேடிக்கொண்டிருக்க...

ஆருடம் சொன்னவர்கள்
இன்று ஆய்வாளர்களாகி
வீழ்ச்சிக்குக் காரணம் சொல்லிக் கொண்டிருக்க....

பிடித்த முயலுக்கு மூன்று காலென்றவர்கள்
ஒப்புதல் வாக்கு மூலங்களை ஒப்பித்துக் கொண்டிருக்க
அறிவாளிகளென அறியப்பட்டவர்களின்
திருமுகங்கள் திருவாய் மலர்ந்து கொண்டிருக்க....

மறுபுறமாய்....

'ஆசியாவின் ஆச்சரியமாக'
வயிற்றுப்பாட்டிற்கு வழியற்ற ஆரியவதிகள் பலர்
தம் அவலங்களை மறைத்துக் கொண்டிருக்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர்
மனிதாபிமானப் போர் என்று
போருக்குப் புதுவிளக்கம் சொல்லி
அதிகார மமதையிலே
கொக்கரித்துக் கொண்டிருக்க....

சிறுதுளி பெருவெள்ளமாப் போல்
விட்ட தவறுகளால்
பெருந்துயரஞ் சூழ
வந்த வெள்ளத்தால்
நின்ற வெள்ளத்தையும் இழந்து
திக்கற்று நிற்கிறது - ஓர்
அப்பாவிச் சனம்.

வாழ்வதற்கு வழியும்
விடிவதற்கு வகையும் காணாத்
தன்னலத் தலைவர்களும்
தார்மீகவான்களும்
சிறுமைச் சிந்தனைவாதிகளுமான
எங்கள் காவலர்கள் தம் பயணம்
இனிதே தொடர்ந்த படி.....

**நீங்களும் எழுதலாம் - 17**
**ஆடி - ஆவணி 2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சரி’யெனப்பட்டது

*அவர் தனக்குச்*
*சரியெனப்பட்டதைச் செய்கிறார்*
*நேற்றுச் சரியெனப்பட்டது ஒன்றாகவும்*
*இன்று சரியெனப்படுவது இன்னொன்றாகவும்*
*நாளை சரியெனப்படுவது வேறொன்றாகவும்*
*நாளை மறுதினம் மற்றொன்றாகவும்*
*இருக்கக்கூடும் ஆயினும்*
*அவர்*
*நேற்றுச் சொன்னவற்றுக்காக செய்தவற்றுக்காக*
*இன்று இன்னொன்றைச் சொல்கிறேன்.*
*செய்கிறேன் என்பதற்காகவோ*
*நாளை வேறொன்றைச் சொல்வேன்*
*செய்வேன் என்பதற்காகவோ*
*வருந்தியதுமில்லை வருந்தப்போவதுமில்லை*
*ஏனெனில்*
*எச் சந்தர்ப்பத்திலும் அவர்*
*தவறுவிட நியாயமில்லை*
*ஏனெனில்*
*அவர் தன் பொருட்டுத்*
*தனக்குச் சரியெனப்பட்டதையே*
*என்றும் சொல்கிறார்! செய்கிறார்.*

**நீங்களும் எழுதலாம் - 18**
**கார்த்திகை - மார்கழி 2010**

சரியான செயல் பற்றிய பெரும்பாலான அரசியல்வாதிகளின் மனோநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவதி

'சும்மா இரு'
மனதிற்குச் சொல்லிக் கொள்கிறேன்
ஆயினும்
ஒவ்வொரு பொழுதும்
கனத்தவைகளால் நிறைந்து கொள்கிறது.

ஒன்று முடிய ஒன்றாயும்
ஒன்றுக்குள் ஒன்றாயும்
இன்னும் பலவாயும்
அடுக்கியும் நெருக்கியும்
அவலப்படுத்துகின்றன.

நுழைந்த சுமைகள்
ஒன்றாய் திரண்டு
வெளிக்கிளம்பும் பொழுதுகளில்
இதயம் சுக்கு நூறாகி...

இயற்கை வெற்றிடத்தை அனுமதிப்பதில்லை
மனதும் கூடத்தான்.

**நீங்களும் எழுதலாம் - 27**
**கார்த்திகை - மார்கழி 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடக்கம்**

*அனைத்தும் அடக்கம்*
*இவர்கள்*
*வித்துவப் பிடிக்குள்!*

*எழுச்சியும் வீழ்ச்சியும்!*
*ஆக்கமும் அழிவும்!*
*வெற்றியும் தோல்வியும்!*

*எவையுமே*
*விலையில்லாதன*
*இவர்கள் பார்வையில்*
*எல்லாமே இரசனைக்குரியன!*

*சிறுமயிரைத் தானும்*
*உசுப்பாமல் சிந்திக்கத் தெரிந்தவர்கள்*
*நடந்தவைகட்கு - காலம் கடந்தவைகட்கு*
*விளக்கந்தரு - வல்லுநர்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாவம்*
*இந்தச் சொல்லெறி மன்னர்கள்*
*தம் மேலாளர்களின் - சிறு*
*கண்ணெறிக்குக் கூட கலங்கிப் போபவர்கள்!*
*கடைக்கண்ணிற்காய்*
*காத்துக்கிடப்பவர்கள்!*

*கட்டமைக்கப்பட்ட தடாகத்தில்*
*நீச்சல் அடிக்கும் இவர்களினால்*
*சிறு துரும்பேனும் கரையேறப்போவதில்லை!*

*உண்மையில்*
*இவர்கள் திருப்பார்வை பட்டு*
*எதுவும் உருப்பட்டதாய்*
*ஒரு நாளுமில்லை!*
*பிரேதங்கள் போதும் இவர்களுக்கு*
*தம் இருப்பை நிலை நிறுத்த!*

**நீங்களும் எழுதலாம் - 20**
**வைகாசி - ஆனி 2011**

ஆதிக்க சக்திகளுக்கு சேவகம் புரியும் ஒரு பிரிவினரின் நினைப்பும் கையாலாகாத்தனமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிச்சம்

கனவு காணுங்கள் என்று
எங்களுக்குச் சொல்லப்பட்டது
கனவு காணும் விடயங்கள் குறித்தும் சொல்லப்பட்டது
கனவு காண்பதற்கான
நேரசூசியொன்றும் ஒழுங்கமைக்கப்பட்டது
உறக்கத்தில் இருக்கையிலேயே
நமக்கெல்லாம் உபதேசிக்கப்பட்டது.

எங்களை
இளைப்பாறச் சொல்லி ஆசுவாசப்படுத்தினார்கள்
குழந்தைகளைப் போல கையில் ஏந்தினார்கள்
அன்பளிக்கப்பட்ட சொகுசுகளின்
உல்லாசத்தில் மிதக்கவிட்டார்கள்.

காலம் செல்ல
கால்கள் தேவையற்றதாய் உணர்ந்தோம்
அயலவர்களோடு உறவாட விருப்பமின்றி
உதாசீனமாய் இருந்தோம்
இரவற் சரக்குகள் தந்த இதத்திலே
எம்மை மறந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பண்டு இருந்த மூடத்தனம் மட்டுமே*
*எங்களுக்கான மூலதனமாக எஞ்சி இருக்கிறது.*

*எந்தப் புதிதும்*
*எம்மால் முடியவில்லை*
*அந்தப் பழமைக்கும்*
*யாரோ உரித்துடையவராக...*

**நீங்களும் எழுதலாம் - 21**
**புரட்டாதி - ஐப்பசி 2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'திரு'வுடையார் எனப்படுவோர் ஆடல்

*தம் பாதையிலே இல்லாதவரை*
*பெரும்பாடுபட்டு*
*தம் வழிக்கு இழுக்க அல்லற்பட்டார்*
*நாசங்கள் அனைத்தும் அதனாலென நம்பவைத்தார்.*

*தட்டுங்கள் மெதுவாக!*
*திறக்கின்றோம்*
*கேளுங்கள் மெதுவாக!*
*தருகின்றோம்!*
*கதையளந்தார்....*
*நிலை குலைந்து போகையில்*
*நியாயங்கள் பல சொல்லி*
*பணியுமாப் போலவும் செய்தார்.*

*நாடுகளின் உதவி நாடி*
*ஏடுகள் உரையா நெறிமுறையில்*
*கோரப் பிரளயத்தை*
*ஆக்கியதன் பின்*
*அவலத்தை விழாவாக்கி*
*அழிவை முதலாக்கி*
*பிழையை சரியெனச் செய்யும்*
*வித்தை புரிகின்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அழுத பிள்ளை பால் குடிக்கும்*
*அடம்பிடிக்கா வீணரிடம் ஏன் வாதம்*
*நந்திக் கடலுடன்*
*முடிந்த கதைக்கு!*
*கேட்கட்டும்! கெஞ்சட்டும்!*
*தலை தடவட்டும்!*
*காலில் விழட்டும்!*
*என்றபடி...*
*திரைவிலகாத் திருவிளையாடல் தொடர்கையிலும்...*

*இன்றோ நாளையோ....*
*இன்னும் பூச்சாண்டி காட்டி*
*தம் பெருமையுரைத்து*
*பிளவுகளை உண்டாக்கி*
*தம்பட்டம் அடித்து மகிழ்கின்ற*
*இந்த இழிநிலையோ*
*இன்னும் எத்தனை காலம் தான்?*

**நீங்களும் எழுதலாம் - 23**
**பங்குனி - சித்திரை 2012**

திருவுடையார் எனப்படுவோர் (எனத் தம்மைக் கூறிக்கொள்ளும்)
- மேட்டுக்குடி அரசியல்வாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலப்படுபவை

*மேடு திருத்தி*
*பள்ளம் நிரவி*
*பாத்தி கட்டிப்*
*பயிரிட்டது போலும்!*
........................
*ஒரு காலம்*
...........................
*விளைந்தது போலும் விளையாதது போலும்!*
*வீடு வந்து சேராமையின் விளங்காதது போலும்!*

*ஓடிய வண்டி*
*அச்சாணி கழன்று நின்றது போலும்!*
*இருதலையில் நெருப்பெரிய*
*இடைநடுவே அகப்பட்டது போலும்!*

*சாண் ஏற முழம் சறுக்கிற்று என்பது போலும்!*
*சாண் இருக்கையில்*
*சந்தர்ப்பம் நழுவிற்று என்பது போலும்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆதரித்தவர் போலும்!*
*ஆதரியாதவர் போலும்!*
*திடுக்கிட்டுப் போனோரும்*
*செய்வதறியாது திகைத்துப் போனோரும்*
*போதுமென்போரும்*
*மீண்டெழும் என்பாரும்*

*கேள்விக் குறிகளுடன்*
*நிகழ்காலம் கரைகிறது*
*போலப் படுபவற்றின்*
*பொய் உண்மை*
*தேர்ந்திடுங்கால் அன்றி*
*ஓர் காலும் போயகலா*
*நம்மைப்பிடித்த இருள்.*

**நீங்களும் எழுதலாம் - 24**
**பங்குனி - சித்திரை 2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவ நவமாய் புலராப் பொழுது

நம்பி நம்பி ஏமாந்து போகிறது மனம்
காலச் சுழற்சியில் கரைந்து போகின்றன
அனைத்தும்.

நவ நவமாய்ப் புலரும் பொழுதுகளில்
நேற்றைய நினைவுகள் ததும்பி மேலெழுந்து

நிகழ்ந்திருக்கக் கூடாதவை
நிகழ்ந்து விட்டதால்
உழுத்துப் போன உள்ளத்தில்
ஊறும் வினாக்கள்
ஆர்ப்பரித்து அடக்கும்
அவ்வப் போது வாழ்வின் மீதான ஆசைகளை.

களைகளுக்குக் காய்களும்
காய்களுக்குக் களைகளும்
இலக்காகியதில்
பசுமை வெந்த தேசத்தில் பாலை படர்ந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கட்சி மாறலும்*
*காட்சி மாறலும்*
*கொள்கை மாறலுமான*
*குத்துக் கரணங்களும்*
*துரோகத்தனங்களும்*
*நிலைகுலையச் செய்யும்.*

*அச்சு ஊடகங்களிலும் அலைவரிசைகளிலும்*
*உச்ச சபையின் அமளிகுமளி*
*மனது புரட்டி மூளை மக்கி*
*மீண்டும் வேதாளம்*
*ஏறுவது புரியாமல்*

*வருடா வருடம் வருகிற*
*புத்தாண்டு தீபாவளி*
*எனப் பெருநாட்களில் பேசு பொருளாகிய பின்*
*தூசாகும் அடிப்படை விடயங்கள்!*

*ஆன பின்னும் மனது நம்பும்*
*நாளை கூடவே*
*ஏமாற்றப்படுவதான உணர்வோடு!*

**நீங்களும் எழுதலாம் - 25**
**பங்குனி -சித்திரை 2021**

அமளிகுமளி :- கூச்சல் குழப்பம்(அமளிதுமளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய விநோதங்களில்

எங்கோ ஒரு கோவில்
எங்கோ ஒரு பள்ளி
எங்கோ ஒரு தேவாலயம்
எங்கோ ஒரு விகாரை
சேதமாக்கப்படலாம்.
எங்கோ ஒரு நிலம்
ஆக்கிரமிக்கப்படலாம்.
எங்கோ ஒரு தொன்மம்
புதைக்கப்படலாம்.
எங்கோ ஒரு அடையாளம்
அழிக்கப்படலாம்.
எங்கோ ஓர் சமூக உடைமை
நாசஞ் செய்யப்படலாம்.
எங்கோ மோதலில் உயிர்கள் குடிக்கப்படலாம்.
ஒவ்வொன்றும் ஒவ்வொரு போர்வைக்குள்
சர்வ சாதாரணங்களாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காணாமற் போனவர் கைவிடப்படவும்*
*அரசியல் கைதிகள் அலட்சியப்படுத்தப்படவும்*
*மீள்குடியேற்றம் நிவாரணம் மந்தப்படவும்*
*போதைப்பொருள் பாதாள உலகம்*
*மறக்கப்படவும்*
*அரசியல் தீர்வு புதிய யாப்பு*
*கிடப்பில் போடப்படவும்*
*விலைவாசியேற்றம் வறுமை இலஞ்ச ஊழல் போர்க்கொடி*
*அர்த்தமற்று விடவும்*
*உள்நாட்டுக் குப்பையிலிருந்து வெளிநாட்டுக் குப்பைவரை*
*அலசப்படுகின்றன*
*இன்றைய விசேஷங்களாக...*

*இன்னும் நாம் சரிவர*
*உணர்ந்திலமாயின்*
*பின்னோக்கும் மந்தைகளாக*
*அரசியல் சந்தையின் நாளாந்த நடப்புகளில்*
*கவனம் கலைந்து காலம் தொலைந்து*
*வாழ்ந்திடலாம் வெற்று ஜடங்களாக!*

**நீங்களும் எழுதலாம் - 26**
**ஆடி - ஆவணி 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏக்கப் புள்ளிகள்

*புள்ளியில் தொடங்கி*
*ஏதோவோர் புள்ளியில்*
*முடியும் வாழ்வு.*

*இனம் மொழி நிலம் மதம்*
*நான் நீ எனது உனது என*
*விரிந்து செல்லும் புள்ளிகளில்.*

*புள்ளிகள் தொலைதலும்*
*புள்ளிகள் அழிதலும்*
*புள்ளிகள் கரைதலுமாய்.*

*ஒவ்வோர் படி நகர்விலும்*
*புள்ளிகளைப் புள்ளிகளே*
*அழிக்கும் வைரசுகளாய்.*

*தன் வீட்டுக்கதவைத் தட்டாதவரை*
*ஒதுங்கியிருந்து ஒத்தோடிகளாய்.*

*அற்ப சந்தோசங்களில் அகம் மலர்ந்து*
*அடிமுடி தேடியவர்களாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்வோம்
வென்று தருவோம் எனப்
புறப்பட்டவர்களே
தொடக்கப்புள்ளியை மறந்தவர்களாக

இல்லாத வரைபுகளை
உள்ளதாக உரைத்தலும்
வீட்டுப்பாடம் செய்யக் கள்ளப்படுதலும்
இலக்கற்ற பயணங்களின்
காலம் கடத்தலும்

இழப்புகளும்
இழப்புகள் மீதான வலிகளும்
இன்னும் இன்னும் நீள...

விடையில்லாத ஓர் ஏக்கப்
பெருந்துயரப் புள்ளியில்
முடிந்து போகும் வாழ்வு.

**நீங்களும் எழுதலாம் - 27**
**பங்குனி - சித்திரை 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிய சாபம் கொவிட்

*எல்லாம் அசைவற்றுப் போவதும்*
*அசைகின்ற சிறு காலமும்*
*நிச்சயமற்றதாக*
*பூமிப்பந்தில்.*

*தரையும் அடங்க*
*நீரும் அடங்க*
*வானும் அடங்க*
*உலக முடக்கம்.*

*நிமிடங்கள் மணிகள் நாட்கள் என*
*வெறுமனே*
*ஆண்டு கடந்தும்*
*தீராத தீவிரம்.*

*காலம் காலமாக*
*என்பும் சதையும் இரத்தமுமாகிப் போன*
*அமைப்பாக்கத்தின் சின்னாபின்னம்.*

*கட்டிறுக்க அமைப்புகளின்*
*கலைவிலும் களையெடுப்புகளிலும்*
*வேகமாகிப் போனது*
*இதன் சிதைத்தல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஜெட் வேக உலகு*
*மாட்டுவண்டி மந்தமாக*
*மறு அறிவிப்பின்றிய ஒத்திவைப்புகள்*
*சுபாவமான சுவாசமற்று*
*முகக்கவசம் வடிகட்டிய*
*வெப்பமூச்சு.*

*நாலு சுவருக்குள்*
*பொலித்தீன் வேலிகள்*
*வருவதும் போவதும்*
*கண்காணிப்பிற்குள்*
*ஒழுங்கற்ற ஒழுங்கொன்றின்*
*பிரசவங்கள்.*

*போதாக்குறைக்கு*
*அரசியலும் மருந்து வாணிபமும்*
*வெருட்டியாக்கும் வேடிக்கைகள்.*

*கோலாகல விழாக்களும்*
*கூடிக்களிக்கும் குதூகலங்களும்*
*இல்லாமல்*
*வறண்டிருக்கும் வாழ்வு...*

*இத்தனைக்கும்*
*குறைந்த பட்சம்*
*ஒரு பத்தாண்டைச் சப்பித் தின்றுவிட்டு*
*இன்னும்*
*சபித்துக் கொண்டிருக்கிறது.*
*கொடிய கொவிட் வைரஸ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் கதிரைகள்

அவர் ஊடாக
இவர் ஊடாக
உவர் ஊடாக
எவர் ஊடாக
என்பதிலே
கழிந்துவிடும் காலம்.

தம்மை மீறி
ஒன்றுமாகக் கூடாதென்ற
தற்பெருமையில்
பெரும் கதிரைகள்.

ஆளைப் பார்த்து
ஆட்டத்தை அளவிடும்
அற்பத்தனங்களில்
வெற்றுத் தாமதங்களும்
வேண்டாத இழுத்தடிப்புகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டு செல்லும் நாளைகளில்
படியேறிப் படியேறி
அலைக்கழிதல்களில்
காற்பணச் சுண்டங்காய்க்கு
சுமைகூலி முக்காலாக....

கடந்து விட்ட நாட்பொழுதுகளில்
நழுவி விட்ட
நற்கருமங்கள், வாய்ப்புகள்.

முயன்று முயன்று
முடியாதெனச் சோர்ந்த பின்பு
நிறைவேறக் கூடும் அலுவல்கள்
பருவம் தப்பிய மழையென

எதையும் பொருட்படுத்தா
இப்பெரும் கதிரைகள்
மனது வைத்தால்
கொஞ்சமேனும்
உருப்படக் கூடும் நாடு.

**நீங்களும் எழுதலாம் - 28**
**பங்குனி - சித்திரை-2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்று தானோ?

*சுயம்*
*கபளீகரிக்கப்பட்டு*
*கிடைத்த சுதந்திரத்தில்*
*திளைத்த தலைவரெனப்பட்டோர்*

*சுயத்தை மீட்கக்*
*கிடைத்த அவகாசத்தில்*
*யார்யாரோ விரித்த வலைகளில்!*

*சூரியனே*
*தமைக் கேட்டு எழுவதும்*
*மறைவதுமான*
*சாம்ராச்சியக் கனவுகளில்!*

*பிளவுகளைச் சரிப்படுத்தாமல்*
*ஆழமாக்கித்*
*தீர்ப்பளிக்க*
*அதே எஜமானர்களிடம்*

*திசை மாறும் வெற்றிக் களிப்புகளில்*
*மிதந்த தரப்புகள்*
*இரட்சகர்களாக*
*யதார்த்தம் மறந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடும்போக்கு என்றோ*
*கடும்விலை செலுத்தும்; எம்மவர்க்கு*
*எதுவுமிலவாகும்*
*என்பது புரியாமல்*
*வருடா வருடம் வருகிற பண்டிகைகளாக*
*அனர்த்தங்களையும் வரவிட்டு*
*நாட்டைக் கடனாக்கி*
*நிவாரணமென*
*அப்பாவி மக்களை*
*கையேந்திகளாக்கி*

*வறண்டு போகும் மண்ணை*
*மாசாகும் வளியை*
*உவராகும் நீரை*
*காக்க ஆவன செய்யாமல்*
*இறுதியில்*
*கடலும் மாசாக*

*எதிலும் தன்னிறைவற்று...*

*என்னே பற்றாளர்கள்!*
*எழுபதாண்டாகியும்*
*எழாத சுயம்*
*இனி என்று தானோ?*

**நீங்களும் எழுதலாம் - 29**
**வைகாசி - ஆனி 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகம் பெயர்தல்

*அந்தமண்*
*படுத்துப்புரண்டு ஓடிய, விளையாடிய மண்*
*இன்றேனோ*
*ஒட்டமுடியாத படிக்கு அந்நியமாயிருக்கிறது.*

*அதுவும்*
*ஒரே நாடான ஒரு தீவில்.*

*பெயர்வு என்றறியாப் பெயர்வு*
*ஒவ்வொன்றான பெயர்வு*
*கல்வியால்*
*தொழிலால்*
*அரச இயந்திரத்தின் அடாவடித்தனத்தால்*
*ஒத்தோட முடியா ஒவ்வாமைத்தனத்தால்*
*எனப் பெயர்தல் பெரிதாயிற்று.*

*எனக்குத் தெரிந்த சிலருக்கு*
*என்னைத் தெரியாமலும்*
*என்னைத் தெரிந்த சிலரை*
*எனக்குத் தெரியாமலும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒத்திசைவான நண்பர்களில்லாமலும்*
*இருக்கின்றவர்களோடு*
*ஒத்திசைய முடியாமலும்*
*முப்பது ஆண்டுகள்*
*முடிந்திற்று.*

*எல்லாம்*
*புதிதாக...*
*அகம் பெயர்தலாயிற்று*
*புலம்பெயர்தலிலும் கொடிதாக.*

**நீங்களும் எழுதலாம் - 29**
**வைகாசி - ஆனி 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேர்கள்

மண்ணிற்குள் இருப்பதால்
மரங்களைத் தாங்கும் வேர்கள்
வெகுவாகத் தெரிவதில்லை.

மறைந்திருப்பதனால்
மானிடர் பலரும்
தம் உயர்வுக்குள் உறைந்திருக்கும்
அடிக்கட்டுமானங்களில் அக்கறைப்படுவதில்லை.

அடிப்படை மீதான அறிவில்லையெனில்
மனித விழுமியங்களுக்கான மாண்புகளுமில்லை
நிலைத்திருக்கும்
நெடிய பண்பாட்டுத் தனித்துவங்களுமில்லை.

நாம் வழி வழியாக ஏறிவந்த
ஏணிகள்தான்
எத்தனை? எத்தனை?

சுற்றமும் சூழலும்
கற்றுக் கொடுத்தவையும்
பெற்றுக்கொடுத்தவையும்
ஏராளம் ஏராளம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தானுண்டு தன் குடும்பமுண்டென்று*
*எல்லோரும் இருந்துவிட்டால்*
*எப்படி?*

*வண்ணத்துப் பூச்சியின்*
*இறகடிப்பிலும்*
*இருக்கிறது*
*ஓர் இயங்கியல்*
*ஒவ்வொரு மனிதப் பிறப்புக்கும்*
*இருக்கிறது ஓர் அர்த்தம்.*

*நின்று நிதானிக்காவிடின்*
*எதனையும் கண்டுகொள்ள மாட்டோம்*
*உயர்கின்ற அளவுக்கு*
*அத்திவாரத்தை ஆழமாக்கமாட்டோம்.*

*இருத்தலைப் பற்றி*
*வெறுமனே பேசிப் பிரயோசனமில்லை*
*வேர்களைக் கண்டறியச் சற்றேனும் முயலாவிடின்.*

**நீங்களும் எழுதலாம்-30**
**புரட்டாதி - ஐப்பசி 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலிபீடம்

நமது நிலம்
நமது புலம்
நமது வளம்
நமது நிலை
நாம் சார்ந்தோர் விலை
அறியாதவர்களாய்
அறியாமை இருளில்!

வீங்கினோம்
விரலின் அளவை மறந்து வாங்கினோம்
வரவின் அளவு கடந்து!

தந்திரக் கூட்டுக்களை
நம்பி நம்பி
நாளடைவில்
நாட்குறித்த நோயாளிகளாக!

ரோம் பற்றி எரிகையில்
யாழ் மீட்டிய
நீரோ மன்னர்களாகத்
தலைவர்கள்
தத்தம் கேளிக்கைத் திட்டங்களில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இனம் மதம் மொழி பண்பாட்டுக்கு*
*சொந்தம் கொண்டாடும் இன்னொரு வகையினர்*
*முகநூல் போராளிகளாக...!*

*புனைவுகளுக்கும் உண்மைகளுக்கும்*
*இடையிலான*
*புரிதல் ஏதுமற்று...*
*கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமின்றி*
*நமக்கான பலிபீடங்களை நாமே*
*தயார் செய்கின்றோம்.*

**நீங்களும் எழுதலாம் -31**
**தை - மாசி 2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழி

*மின்னலடித்து*
*இடி இடித்து*
*பெருமழை பொழிந்து*
*வெள்ளம் போட்டு*
*ஓய்ந்திருக்கிறது வானம்.*

*மழைக்கு முளைத்த காளான்களும்*
*ஆர்ப்பரித்த ஈசல்களும்*
*ஆரவாரமின்றி*
*அடங்கிக் கிடக்கின்றன.*

*பற்றுவதற்கு வழி தெரியாது*
*இங்குமங்கும் தாவிக்கொண்டிருக்கின்றன*
*ஞான சூனியங்கள்.*

*பணமும் பதவியும்*
*அதிகாரமும் ஆணவமும் கொண்ட*
*சுயநலங்கள்*
*சுயமிழந்து நிற்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாய்ப்புகளை*
*நழுவவிட்டு நழுவவிட்டு*
*வழுவழுத்த கூட்டங்கள்*

*மழைக்கால இருட்டில்*
*வழிகாட்டியின்றி அலையும் மந்தைகள்*
*மேய்ப்பனைத் தேடுகின்றன.*

**நீங்களும் எழுதலாம் - 32**
**வைகாசி - ஆனி 2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தருணம்

விலகி ஓடாதீர் நண்பர்காள்,
விடியும் பொழுது நமதாக
முடிவைக் காணும் வழியொன்று
முன்னே தெரியுது ஒரு பொறியாக

பொறியைச் சரியாய் பொருளாக்கி
புரியும் விதத்தில் தெளிவாக்கி
நெறியை மாற்றும் முறைநோக்கி
நின்றால் நிலைமை மாறாதோ

வீணே அலட்சியம் செய்யாதீர்
வெறுப்பைக் கொட்டி உமிழாதீர்
ஏனோ அங்கவர் கொதித்தெழுந்தார்
என்றெண்ணில் அதுவே முறையாகும்.

எந்தப் பொறியிலும் ஒளியுண்டு
எதற்கும் முற்போக்குக் குணமுண்டு
அந்த வழியை நாம் உணர்த்தி
அணுகின் அதனாற் பயனுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலம் தானாய்க் கனிவதில்லை*
*கதவுகள் தாமே திறப்பதில்லை*
*சொல்லி எதுவும் வருவதில்லை*
*எனுமியங்கியல் ஏனோ புரிவதில்லை.*

*ஒன்றாய் இணைய ஒரு தருணம்*
*உண்டாய் ஆன இப்போதில்*
*நன்றே நினைந்து செயற்பட்டால்*
*வென்றே விடலாம் விடிவுதனை.*

**நீங்களும் எழுதலாம் - 32**
**வைகாசி - ஆனி 2022**

A. KUGAN
78, 2nd LANE
ANANDAPURI
TRINCO

2022 தன்னெழுச்சிப் போராட்டத்தின்(அரகலய) முற்போக்கான குணாம்சங்களை (மட்டும்) வரவேற்று வழிநடத்தும் நோக்கில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதரித்தவர் போலும்

ஆதரியாதவர் போலும்

திடுக்கிட்டுப் போனோரும்

செய்வதறியாது திகைத்துப் போனோரும்

போதுமெனப் போரும்

மீண்டெழும் என்பாரும்

கேள்விக் குறிகளுடன்

நிகழ்காலம் கரைகிறது

போலப்படுபவற்றின் பொய் உண்மை

தேர்ந்திடுங்கால் அன்றி

ஓர் காலும் போயகலா

நம்மைப்பிடித்த இருள்.

– போலப்படுபவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

அவர் கலை இலக்கியங்களை சமூகத்தினின்றும் பிரித்துப் பாரார்.

தமிழ்த் தேசியத்திற்கு ஒரு புது மனமும் முகமும் தேவை. அது தமிழ் மக்கள் நடுவிலிருந்தே உருவாக வேண்டும்.

அதைச் செய்ய வல்லோர் பழமையையும் பண்பாட்டையும் மெச்சும் அதேவேளை, பழமை வாதத்தில் உறைந்து போலிப் பெருமைகளுட் சிறைப்படலாகாது. அவர்கட்கு விமர்சன நோக்கும் சுய விமர்சனமும் தேவை. சமத்துவ நோக்கும் சாதி – இன–மத வெறுப்பின்மையும் அவர்களைத் தக்கோராய் அடையாளங் காட்டும்.

தனபாலசிங்கம் அத்தகையோரில் ஒருவர். ஈழத்தமிழ்க் கவிதை உலகு மேலும் அறிய வேண்டிய ஒரு முக்கிய கவிஞரும் முற்போக்குச் சிந்தனையாளருமாவார்.

முனைவர் சி.சிவசேகரம்

ISBN 978-955-53138-2-7

மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய் - 0776688318, 021 226 3099
e-mail - mathurangraphics@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org